**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S. 02 /2023**

**CNR.No.TNCB19000**

| **Deposition** | **:** | **DW.5** |
|---|---|---|
| Name | : | மகேஸ்வரி |
| Father's / Husband's Name | : | பொன்னுசாமி |
| Village / முகவரி | : | சரவணம்பட்டி |
| Taluk / தாலுக்கா | : | கோயமுத்தூர் |
| Age / வயது | : | 45 |

The witness swearned under Oaths Act 1969 on this the day of 04th November 2025

**முதல் விசாரணை**

நான் சரவணம்பட்டியில் வசிக்கிறேன். நான் வழக்கின் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன். வாதியை தெரியும். வழக்கின் சங்கதிகள் அனைத்தும் தெரியும். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். வழக்கை தள்ளுபடி செய்ய கேட்டுக் கொள்கிறேன்

.**பிரதிவாதி தரப்பு சானறாவணங்கள்**

| **வ. எண்.** | **தேதி** | **ஆவண விபரம்** | **ஆவணத்தின் தன்மை** | **ஆவண வரிசை** |
|---|---|---|---|---|
| 1 | | எனது ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் | பி.வா.சா.ஆ.5 |

வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

மாரன் மக்கள் பொன்னு சாமி, சுப்பன் , பழனிச்சாமி, மற்றம் நஞ்சுக்குட்டி மற்றும் அவருடைய தாயார், தந்தை ஆகியோர்கள் குடும்ப சொத்தை 29.06.1988 ல் பாகம் செய்தார்கள் என்றால் சரிதான். பாக பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேன். அந்த பாக பத்திரத்தில் க.ச.எண். 805 / 6 இல்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணை வாக்குமூலத்தின் பத்தி 5 ல் க.ச.எண்.805/6 காலையில் உள்ள பூமியினை எழுத தவறவிட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான்.

அந்த பூமியில் யார் யாரெல்லாம் சுவாதீனத்தில் இருக்கிறார்கள் என்பதை காட்ட கூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்திருக்கிறேன். க.ச.எண்.805 / 6 நஞ்சுக்குட்டிக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் மட்டுமே தெரியும். நான் சொல்வது போல் க.ச.எண்.805/ 6 பூமியில் யார் யாரெல்லாம் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நஞ்சுக்குட்டியின் பெயரில் பட்டா உள்ளது. நஞ்சுக்குட்டியின் வாரிசுகள் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL
Digitally signed by K PALANIVEL
Date: 2025.11.05 19:14:10 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.